செய்தி வெளியீடு எண். 45 நாள்.20.01.2017

# திருவள்ளூர் வி.எம். நகர் ஆர்.எம்.ஜெயின் சி.பி.எஸ்.இ பள்ளியில் ஆட்சி மொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---------

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் விரைவாகவும் முழுமையாகவும் நடைபெறத் துணைபுரியும் வகையில் ஆண்டுதோறும் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 2016-17 ஆம் ஆண்டின் ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 24, 25.01.2017 ஆகிய இரண்டு நாள்களில் காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை திருவள்ளூர் நகரத்திலுள்ள ஆர்.எம்.ஜெயின் சி.பி.எஸ்.இ பள்ளி (வடக்கு வாசல்), வி.எம். நகர், திருவள்ளூர் – 602 001-ல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத்துறை / வாரியம், கழகம், தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் இருவர் (இதற்கு முன்னர் இப்பயிற்சிகளில் பங்கேற்காத அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் நிலையிலுள்ள பணியாளர்கள்) இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கேற்க வேண்டும். பயிலரங்கத்தின் வாயிலாக ஆட்சிமொழித் திட்டத்தின் இன்றியமையாமை, திட்டச் செயலாக்கம், செயலாக்கத்தின் பல்வேறு நிலைகள், அரசு அலுவலர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தமிழில் மட்டுமே சுருக்கொப்பம், கையொப்பமிட வேண்டும் என்பது முதல் அனைத்து நிலைகளுக்குமான ஆட்சிமொழித்திட்ட அரசாணைகள் மற்றும் பட்டறிவும் எடுத்துரைக்கப்பெறும்.

ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கில் கோட்டம், மாவட்டம், வட்டம் மற்றும் சார்நிலைகளில் உள்ள பல்வேறு துறை அலுவலகங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் பங்கேற்றுப் பயனடையுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி எ.சுந்தரவல்லி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்,**